செய்தி வெளியீடு எண்: 840 நாள்: 24.06.2024

## செய்தி வெளியீடு

## கண்டதேவி அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் தேரோட்டம் 18 ஆண்டுகளுக்கு பிறகு 21.6.2024 அன்று சிறப்பாக நடைபெற்றதையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை அப்பகுதி கிராம மக்கள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கண்டதேவி அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிவகங்கை தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் திருக்கோயிலாகும்.

சட்டம் ஒழுங்கு மற்றும் பல்வேறு பிரச்சனைகள் காரணமாக 2006 முதல் 2023 ஆண்டு வரை தேரோட்டம் நடைபெறவில்லை. தேர்த் திருவிழா நடத்தப்படாதது பக்தர்களிடையே ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி வந்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசின் சீரிய நடவடிக்கையின் காரணமாக, 18 ஆண்டுகளுக்கு பிறகு தேரோட்ட விழா சிறப்பாக கடந்த 21.6.2024 அன்று நடைபெற்றது. இவ்விழாவில், இலட்சக்கணக்கான மக்கள் பங்கு பெற்று மகிழ்ந்தனர். பல்லாண்டுகளுக்குப் பிறகு சீரோடும் சிறப்போடும் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை மூலம் நடத்தப்பட்ட இந்த விழா சிவகங்கை மாவட்ட மக்களுக்கு மட்டுமன்றி இப்பகுதி மக்கள் அனைவருக்கும் பேருவகை அளித்துள்ளது.

அதனையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று (24.6.2024) தலைமைச் செயலகத்தில், சிவகங்கை மாவட்டம், கண்டதேவி – பெரியநாயகி அம்பிகா சமேத சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயில் திருவிழாவை முன்னிட்டு 18 ஆண்டுகளுக்குப் பிறகு 21.6.2024 அன்று தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றதையொட்டி அப்பகுதி முக்கிய பிரமுகர்கள் மற்றும் கிராம மக்கள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் உடனிருந்தார்.

..........

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu